1975 எப்ரல் 8]

நிலையில் இருப்பதால்—பரிசுச் சீட்டின் வருமானத்தைக் கொண்டாவது அல்லது வேறுவகையிலாவது மீதமிருக்கிற பள்ளிக்கூடங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித்தர உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத் தில 91 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன என்றால் 49 பள்ளிக்கூடங்களுக்கு சொந்தக் கட்டிடம் இருக்கின்றன. 1974-75-இல் 13 பள்ளிக்கூடங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்டப்படுகிறது. மீதமுள்ளது 29 தான். அடுத்து வரும் ஆண்டுகளில் படிப்படியாக கட்டி முடிக்கப்படும்.

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 78 பள்ளிக்கூடங்கள் இருக் கின்றன. 49-க்கு சொந்தக் கட்டிடம் இருக்கிறது. 3-க்கு கட்டிடங்கள் இந்த ஆண்டில் கட்டப்படுகின்றன. மீதமிருப்பதற்கும் சொந்தக் கட்டிடம் கட்டித்தர முயற்சி மேற்கொள்ளப்படும்.

ஐயாவையனாற்றின் குறுக்கே பாலம்

* 592 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மாயூரம் ஒன்றியம், கொற்கை எனும் ஊரில் ஐயாவையனாற் றுக்குக் குறுக்கே பாலம் அமைத்திடும் பணி தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சட்ட மன்ற உறுப் பினர் குறிப்பிடுகிறதான பால வேலையை முன் வைப்பு வேலையாக நெடுஞ் சாலைத் துறைப்பணியினரிடம் ஒப்படைத்து செயல்படுத்த மாயூரம் ஊராட்சி ஒன்றியப் பொதுக்குழு தீர்மானித்துள்ளது. இதற்கான தேவையான நடவடிக்கைகளை ஊராட்சி ஒன்றிய ஆணையர் எடுத்து வருகிறார்.

திரு. என். கிட்டப்பா : பாலம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக் கைகளை ஊராட்சி ஒன்றிய ஆணையர் எடுத்து வருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாயூரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நான். அந்தத் தொகுதியில் கட்டுவதற்கு எடுத்துக்கொண்ட பாலங்கள் பல அப்படியே பாதியில் நிற்கின்றன—இன்னும் கொண்டத்தூர் மன்னி யார் பாலம் அமைக்கும் காண்டிராக்டர் தம்மை அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரின் உறவினர் என்று சொல்லிக்கொண்டு 200 மூட்டைகளுக்குமேல் சிமிண்டை விற்றிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு இருக்கக்கூடாது. கேள்வியாகப் போடுங்கள்.

திரு. என். கிட்டப்பா : அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நான்தான் அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அருள்கூர்ந்து அந்த விஷயத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடு அந்தப் பாலங்களைக் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அவர்தான் அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் காண்டிராக்டர் யார் என்பதும் அவருக்குத் தெரிந்திருக்கும். அதிகாரிகளிடத்தில் சொல்லி தக்க நடவடிக்கை எடுக்கலாம் நாங்கள் அந்தப் பகுதிக்கு வரும்போது சொன்னாலும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வானொலி மன்றங்கள்

* 593 வினா —திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில், 1973-74 ஆம் ஆண்டின் சிறந்த வானொலி மன்றம் என ஏதேனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எது ?

(உ) இப்படிப்பட்ட வானொலி மன்றங்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த குறிச்சி என்னும் கிராம வானொலி மன்றம்.

(உ) விவர அறிக்கை @ அவைமுன் தனியே வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த வானொலி மன்றங்களை எல்லாம் பெரும்பாலும் ஏழை எளிய உழவர்கள் நடத்துவது இல்லை. யார் நடத்துகிறார்கள் என்பது கிராமவாசிகளுக்குத் தெரியும். இந்த மன்றங்களுக்கு வானொலி நிலையங்கள் என்ன என்ன உதவிகளை அளிக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : வானொலி நிலையங்கள் இவற்றிற்கு எந்த உதவியும் செய்யவில்லை. கிராம மக்களின் முன்னேற்றத்திற்காக செய்திகளை எல்லாம்—விவசாயம்—நல்வாழ்வு—இளைஞர் சீரணி—இன்னும் ஐந்தாண்டுத் திட்டங்கள்—ஆகியவற்றைப்பற்றி எல்லாம் கேள்விகள் கேட்டு பல விளக்கங்களைப் பெற்று செயல்படுகிறார்கள். இந்த மன்றங்கள் எப்படிச் செயல்படுகின்றன என்பதை மாவட்ட ஆட்சித்

@ 121 ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.